

திருச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் திருவாசி கிராமத்தில் கால் நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கோமாரி நோய் தடுப்பு ஊசி முகாமினை நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார். மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர். கதிரவன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, அவைத்தலைவர் அம்பிகாபதி, ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஸ்ரீதர், வழக்கறிஞர் செந்தில்குமார், மண்டல இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை மரு.கணபதி மாறன், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மோடி பிரதமர் பொறுப்பேற்பு: மாநில உரிமைகளை மதித்து -

# ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறோம்!

## பிரதமர் நரேந்திர மோடியை வாழ்த்தி வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

**சென்னை, ஜூன் 11-**

**பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் நரேந்திர மோடி அவர்களை வாழ்த்தி வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், " மாநில உரிமைகளை மதித்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காததால் தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாதளம் உள்ளிட்ட 13 கட்சிகளின் ஆதரவுடன் பிரதமராக மோடி, மூன்றாவது முறையாக மீண்டும் பதவியேற்றார்.

புதுடெல்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பதவியேற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு விழாவில், குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு, மோடிக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இதனையடுத்து, நாட்டின் பிரதமராக மூன்றாவது முறையாக மோடி பதவியேற்றுக் கொண்டார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையில் 29 பேர் ஒன்றிய அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

பிரதமராகத் தாங்கள், அரசியலமைப்பை உயர்த்திப் பிடிக்கும் வகையில் உண்மையாகப் பணியாற்றுவீர்கள் என்றும், நமது நாட்டின் மதச்சார்பற்ற தன்மையைத் தொடர்வீர்கள் என்றும், கூட்டுறவுக் கூட்டாட்சியியலை முன்னெடுப்பீர்கள் என்றும், மாநில உரிமைகளை மதித்து நடப்பீர்கள் என்றும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பீர்கள் என்றும் நம்புகிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கோவை கொடிசியா மைதானத்தில்

# கழக முப்பெரும் விழா ஏற்பாட்டுப் பணிகள் தீவிரம்!

## அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்!

*கோவை, ஜூன் 11-*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவருக்கு பாராட்டு விழா, முத்தமிழறிஞர் செம்மொழிக்காவலர் தலைவர் கலைஞருக்கு நுற்றாண்டு நிறைவு விழா. தமிழ்நாடு புதுவை மாநிலத்தில், தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி மாபெரும் வெற்றி முரசு கொட்டிட, மகத்தான ஆதரவு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா. திமுகழகத்தின் முப்பெரும் விழா, வருகின்ற ஜூன் 15 மாலை 4 மணியளவில், கோவை கொடிசியா மைதானத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவில், வெற்றி நாயகன் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார். மற்றும் தலைவர்கள் பங்கேற்று பாராட்டி வாழ்த்துரை வழங்கி நன்றி தெரிவித்து சிறப்புரை நிகழ்த்து கிறார்கள்.*

*தமிழ்நாடு வீட்டு வசதித் துறை நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி இவ்விழாவிற்கான ஏற்பாட்டுப் பணிகளை தொடங்கி வைத்தார்.*

*கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன்,*

*இந்நிகழ்ச்சியில், கழக சொத்துப்பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்திரன், ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. மணிகண்டன், மு.மா.ச. முருகன், ஆடிட்டர் வெ.சசிகுமார், ரகு துரைராஜ், பகுதிச் செயலாளர்கள் துரை. செந்தமிழ்செல்வன், ப.பசுபதி, அஞ்சுகம் பழனியப்பன், வி.ஐ.பதுருதீன், ஆர். எம்.சேதுராமன், வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ், கே.எம்.ரவி, எ. எம்.கிருஷ்ணராஜூ, மார்க்கெட் மனோகரன், கோவை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் மெட்டல் ராஜாமணி, கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மேற்கு மண்டல தலைவர் தெய்வயானை தமிழ்மறை, சாந்தி முருகன், வி.பி.முபசீரா, அணிகளின் அமைப்பாளர்கள் இரா.தனபால், அக்ரி பாலு, அன்புச் செழியன், ஆர்.கே.சுரேஷ்குமார், சிவப்பிரகாஷ், வி.மணி, தி. கண்ணன், நா.பாபு, கோவை அபு, சஞ்சய், அன்னம்மாள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.எஸ்.நடராஜ், டவுன் பா.ஆனந்த், ப.ப.சிவகுமார், பிரவீன், மாமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர் ஆர். விஜயராகவன், கேசவன் அனைத்து கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள், கழக செயல் மறவர்கள் திரளாகப் பங்கேற்றனர்.*



சேலத்தில் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. கலந்து கொண்டு பேசினார். பேரவை பொருளாளர் க.நடராஜன், சேலம் மாவட்ட தொ.மு.ச. சிறப்புத் தலைவர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் வி.மணி ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

## பொறியியல் சேர்க்கை - 2024 விண்ணப்பிக்க நாட்கள் நீட்டிப்பு!

சென்னை, ஜூன் 11–

2024–25 ஆம் கல்வி ஆண்டிற்கான பொறியியல் மாணவர் சேர்க்கை விண்ணப்பப் பதிவு 06.05.2024 முதல் 06. 06.2024 வரை நடைபெற்றது. அதில் 2,49,918 மாணாக்கர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர் மற்றும் 2,06,012 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளனர். தற்பொழுது மாணாக்கர்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு மாணாக்கர் பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு 10.06.2024 மற்றும் 11.06.2024 ஆகிய இரண்டு நாட்கள் மேலும் நீட்டிக்கப்படுகிறது. இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய மாணாக்கர்கள் புதிதாக விண்ணப்பத்தினை WWW.TNEAONLINE.ORG என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்து, பதிவு கட்டணம் செலுத்தி, தங்களது சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் என்று தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் மற்றும் தலைவர் தெரிவித்துள்ளார்.

# மீண்டுமா மோடி?

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறை மோடி பதவி ஏற்கிறார். அரசியல் வாழ்வு முழுவதும் பெரும்பான்மை வாதம் பேசி, சிறுபான்மை மக்களை உதாசீனப் படுத்திய மோடி நாடாளுமன்றத்தில் ஒரு சிறுபான்மை அரசின் பிரதமராக பொறுப்பேற்பது காலம் அவருக்கு தந்துள்ள தண்டனை என்றே கருதுகிறேன்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது வழக்கமாக பா.ஜ.க.வினர் தொண்டை கிழிய கத்தும் “மோடி, மோடி” என்ற கோஷம் இம்முறை இல்லை. “மோடி கா சர்க்கார்” “மோடி கா கியாரண்ட்டி” என்று வார்த்தைக்கு வார்த்தை மோடியின் வீர பிரதாபங்களை பேசியவர்கள் அமைதியாகிவிட்டனர். பிரதமர் நாற்காலியில் உட்காருவதற்கு ஒவ்வொருநாளும் சந்திரபாபு நாயுடு மற்றும் நிதிஷ்குமார் தயவுக்காக காத்திருக்கவேண்டிய நிர்பந்தத்தினை இந்திய ஜனநாயகம் மோடிக்கு வழங்கியிருக்கிறது. அதனால் மோடி பேசும்போது “என்.டி.ஏ சர்கார்” என்று மீண்டும் மீண்டும் சொன்னதை கேட்டு அவர் அருகில் அமர்ந்திருந்த சிலரே வாய்க்குள் சிரித்துக் கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் தன்னை சந்தித்து ஆதரவு தெரிவிக்க டெல்லி வந்த சந்திரபாபு நாயுடுவுக்கு நேரம் கொடுக்க மறுத்துவிட்ட மோடி இப்போது அவரது கையைப் பிடித்துக்கொண்டு தன் அருகில் உட்கார வைப்பதற்காக “கூச்சண்டி பாபு” என்று கெஞ்சுவதை பார்த்து நகைகாதவர்களே இல்லை!.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேசும்போது மோடி “தோற்றுப் போன இந்தியா கூட்டணி கட்சிகள் எதற்காக இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றனர்?”என்று கேட்டுள்ளார். நாம் ஏன் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்பது அவருக்கு நன்கு தெரியும். வழக்கம்போல தெரியாதது மாதிரி நடிக்கிறார்.

தேர்தல் முடிவுகள் இந்தியா கூட்டணி கட்சியினருக்கு மட்டும் மகிழ்ச்சியைத் தரவில்லை. அரசியலுக்கு அப்பால் அனைத்து தரப்பினரும் மோடிக்கும், பா.ஜ.க.வுக்கும் தனிப்பட்ட முறையில் பெரும்பான்மை கிடைக்காதது குறித்து நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர் என்பதுதான் உண்மை.

உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியில் ராமர் கோவில் கட்டி அதன் அபிஷேக விழாவுக்கு தானே தலைமையேற்று, ராம் லாலாவை பிரதிஷ்டை செய்தவுடன் 2024 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரம் முடிந்துவிட்டது என்றும் தனது அமோக வெற்றி நிர்ணயிக்கப்பட்டுவிட்டதென்றும் என்ற கனவில் வாழ்ந்த மோடியின் ஆணவத்தின் அகம்பாவத்திற்கும் தகுந்த பதிலடி கொடுக்க அயோத்தி மக்கள் காத்திருந்ததை அப்போது மோடி அறிந்திருக்கவில்லை. அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் நாடாளுமன்றத் தொகுதியில் மட்டுமல்லாது அதனை தொட்டு நிற்கும் நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளிலும் பா.ஜ.க. தோற்றது. மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க உத்தரப்பிரதேசம் தலைவாயிலாக இருக்கும் என்று பா.ஜ.க. எதிர்பார்த்திருந்த வேளையில் பா.ஜ.க.வின் தோல்வியை உறுதி செய்த மாநிலமாக உபி மாறியதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. காசி விஸ்வநாதரின் தெய்வீக வல்லமை பெற்ற தூதுவராகவே தன்னை கருதிக் கொண்டிருந்த மோடி பெற்ற வாக்குகள் கடந்த முறை பெற்றதை விட மிகவும் குறைந்து போனதையும் நாம் கவனிக்க வேண்டும்.



**சா.பீட்டர் அல்போன்ஸ்,**
தலைவர்,
மாநில சிறுபான்மையினர்
ஆணையம்,
தமிழ்நாடு.

பா.ஜ.க.வும் அதன் கூட்டணி கட்சிகளும் ஆட்சி அமைக்க தேவையான இடங்களை பெற்றது மட்டுமே தேர்தல் வெற்றி என கருதி விடக்கூடாது. மோடி தனக்காக கேட்ட நானூறு இடங்களை மக்கள் மறுத்ததே பெரிய செய்தி.

மோடி என்ற தனிப்பட்ட அரசியல் தலைவருக்கோ அல்லது பா.ஜ.க. என்ற கட்சிக்கோ மக்கள் ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை வழங்கிடவில்லை. மேலும் சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இவ்வளவு மோசமாக, நடுநிலை தவறி நடந்துகொண்ட தேர்தல் ஆணையம் இருந்ததேயில்லை. ஒன்றிய அரசின் புலனாய்வு நிறுவனங்களான வருமான வரி துறை, சி.பி.ஐ. மற்றும் வருவாய் புலனாய்வு துறை போன்றவைகள் கச்சை கட்டிக்கொண்டு பா.ஜ.க.வின் ஏவலாட்களாக செயல்பட்டதை யாரும் மறக்க முடியாது. முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் உட்பட பல எதிர் கட்சிகளின் வங்கிக் கணக்குகளை முடக்கி அவர்களை தேர்தல் பிரச்சாரம் செய்யவிடாமல் மோடி அரசு தடுத்தது.

இரண்டு முதலமைச்சர்களை கைது செய்து சிறையில் அடைத்தது. தி.மு.க. உட்பட பல மாநில கட்சிகளின் முக்கியமான செயல் வீரர்களை ஓராண்டுக்கும் அதிகமாக விசாரணையின்றி அடைத்து வைத்தது. தட்டிக்கேட்க வேண்டிய நீதிமன்றங்கள் பல நேரங்களில் கண்களையும், காதுகளையும் பொத்திக்கொண்டு செயல்படத் தவறியது இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய சோகம். பெரும்பான்மையான இந்திய ஊடகங்களை பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் கைப்பற்றி மோடியின் கைகளில் முழுமையாக ஒப்படைத்தனர். இவற்றையெல்லாம் கடந்துதான் இந்தியா கூட்டணி கட்சிகள் தேர்தலில் பல மாநிலங்களில் மிகச்சிறப்பான வெற்றிகளை பெற்றுள்ளன. ஊடகங்கள் தங்களது தர்மத்தின் படி நடந்தும், அரசு நிறுவனங்கள் சட்டப்படி நடந்தும், தேர்தல் ஆணையம் தனது அரசியல் சாசன கடமைகளை முறையாகவும் நிறைவேற்றி யிருப்பார்கள் என்றால் பா.ஜ.க. 150 இடங்களைக் கூட பெற்றிருக்க முடியாது. வெறும் இரண்டாயிரத்திற்கு உட்பட்ட வாக்குகளை மட்டுமே பெற்று பா.ஜ.க. வெற்றி பெற்ற தொகுதிகள் 165 என்ற தகவல் அவர்களின் வெற்றி எவ்வளவு பலவீனமானது என்பதை விளக்கும். பா.ஜ.க. கூட்டணி நாடளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களை பெற்ற அதே வேளையில் மக்கள் ஆதரவினை பெருமளவில் இழந்து போனதும் உண்மை.

தேர்தல் முடிவுகள் சொல்லும் மற்றுமொரு முக்கியமான பாடத்தினை சந்திரபாபு நாயுடுவும், நிதிஷ்குமாரும் அவசியம் நினைவில் கொள்ள வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளில் மோடியோடும், பா.ஜ.க.வோடும் நட்பிலும் தோழமையிலும் இருந்த அனைத்து மாநில கட்சிகளும் தங்களது அரசியல் முகவரியை தொலைத்துவிட்டு நடுத்தெருவில் நிற்கிறார்கள். அசாம் கன பரிஷத், அகாலி தளம், மாயாவதி, சந்திரசேகர ராவ், நமது எடப்பாடி பழனிச்சாமி உட்பட அனைவரும் தங்களது அரசியல் அங்கீகாரத்தை இழந்து நிற்கின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் இரண்டுபேர். ஒருவர் மேனாள் ஒரிசா முதலமைச்சர் நவின் பட்நாயக். மற்றொருவர் மேனாள் ஆந்திர முதல்வர் ஜெகன். மோடி அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய மக்கள் விரோத, மாநில உரிமைகளுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றுவதற்கு பெரும் உதவி செய்தவர்கள் இவர்கள் தான். அவர்கள் இருவரையும் கடைசிவரை உடன் வைத்துக்கொண்டு கழுத்தை அறுத்தது பா.ஜ.க.

அவர்கள் இருவரும் செய்த பாவங்களுக்கு இன்று தண்டனை அனுபவிக்கின்றனர். நவின் பட்நாயக்குக்கும் ஜெகனுக்கும்நடந்ததுசந்திரபாபுநாயுடுவுக்கும்நிதிஷ்குமாருக்கும் விரைவில் நடக்கும் என்பது உறுதி. இதற்கு மாறாக இந்தியா கூட்டணியின் கட்சிகளின் தலைவர்கள் மக்களது பேராதரவை பெற்றுள்ளனர்.

பல வட மாநிலங்களில் தனது செல்வாக்கை முழுமையாக இழந்திருந்த காங்கிரஸ் கட்சிக்கு இன்று அங்கெல்லாம் புதிய குருத்துக்கள் துளிர்விடுவதை பார்க்க முடிகிறது. அங்கீகரிக்கப்பட்ட முக்கிய எதிர்க்கட்சி என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளது. ராகுல் காந்தி அவர்களுக்கு நட்சத்திர அந்தஸ்து பெற்ற அரசியல் தலைவர் என்ற அங்கீகாரம் தேசம் முழுவதும் கிடைத்துள்ளது. உத்தரப் பிரதேசத்தின் அசைக்க முடியாத தலைவராக அகிலேஷ் நம்பிக்கையுடன் எழுந்து நிற்கின்றார். தேஜஸ்வி யாதவ், அபிஷேக் பானர்ஜி, சுப்ரியா சூலே, கனிமொழி கருணாநிதி, உதயநிதி ஸ்டாலின் போன்ற கொள்கை வழிப்பட்ட புதிய தலைமுறை தலைவர்கள் வருணாசிரதர்ம, வகுப்பு வாத, வலதுசாரி பிற்போக்கு அரசியலை களத்தில் வெட்டிவீழ்த்த காத்திருக்கும் வேங்கைகளாக அணிவகுத்து நிற்கின்றனர்.

அகில இந்திய அளவில் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக மோடிக்கும், பா.ஜ.க.வுக்கும் தமிழ்நாட்டில் ஓரடி மண்ணைக் கூட விட்டுத் தராமல் அவர்களை வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டி வீழ்த்திய திராவிட நாயகராக நமது முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் இந்த தேர்தல் களத்தின் “ஆட்ட நாயகனாக” அனைவராலும் கொண்டாடப்படுகிறார்.

அரசியல் சாசன சட்டத்தை திருத்த எனக்கு நானூறு இடங்கள் வேண்டும் என்று கேட்டவர்கள் இன்று அரசியல் சாசன சட்ட புத்தகத்தினை தொட்டு வணங்கி கண்களில் ஒத்திக்கொள்கிறார்கள் என்றால். அது இந்திய வாக்காளர்களின் மகத்தான சாதனை. இனிமேல் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற கோஷம் இருக்காது. நாடாளுமன்ற இடங்களின் சீரமைப்பு என்று சொல்லி தென் மாநிலங்களின் அரசியல் செல்வாக்கை குறைக்க செய்யும் முயற்சியும் இனி நடக்காது. ED சற்று பதுங்கும். நீதி மன்றங்கள் தங்களது மாட்சிமையினைமீட்டெடுக்கதுவங்கும். ஊடகங்களின்சுயமரியாதையும், தார்மீக கோபமும் சற்று கூடும்.

வரும் நாட்கள் மிகவும் முக்கியமானவை. மூன்று முக்கியமான மாநிலங்களில் தேர்தல்கள் வர இருக்கினறன. இந்தியா கூட்டணி அவைகளில் வெற்றி பெற்றுவிட்டால் மோடி அரசு வீழும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை. தமிழ்நாடு, ஆந்திர, கேரளா, கர்நாடக, தெலுங்கானா முதலமைச்சர்கள் கூடிப் பேசவேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக ஒன்றிய அரசால் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்பட்ட தென் மாநிலங்கள் தங்களது உரிமைகளைக் காப்பாற்ற ஒன்றாக செயல்படவேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் ஜனநாயக விழுமியங்களும், சமூக நீதியும், மாநில உரிமைகளும், ஏழை எளிய மக்களின் நலனும் பெரும் இழப்புகளை சந்தித்துள்ளன. நீதித் துறை, தேர்தல் ஆணையம் போன்ற ஜனநாயக நிறுவனங்கள் தங்களது பெருமைகளையும் முக்கியத்துவத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருவதை வேடிக்கை பார்க்க முடியாது.

ஆட்சியில் மீண்டும் மோடி என சோர்ந்திட வேண்டாம். மோடியின் காலைப் பிடித்த நிதிஷ் விரைவில் கழுத்தைப் பிடிப்பார். சமூக நீதியின் அரசியலை அனைத்து வட இந்திய மாநிலங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும். நமக்கு விசுவாசமாக இருக்கும் வாக்காளர்களை நாம் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

இந்த தேர்தலில் நடந்த வாக்குப்பதிவின்படி தமிழகத்தில் 223 சட்டமன்றத் தொகுதிகளில் இந்தியா கூட்டணி அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளது ஒரு மாபெரும் சாதனை. முதல்வரின் தலைமையில் தமிழகத்தில் இயங்கிய அனைத்து கூட்டணி கட்சிகளும் தங்களது உச்சத்தை தொட்டு விட்டனர். உச்சத்தை தொட்டதைவிட, தொட்ட இடத்தை தக்கவைத்துக் கொள்வது பெரும் சவால். ஒன்று பட்டு நின்று ஒற்றுமையாக உழைத்தால் 2026 சட்டமன்றத் தேர்தலோடு நாடாளுமன்றத் தேர்தலும் வருவதற்கான வாய்ப்புகள் நிச்சயம் உண்டு.!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவருக்கு பாராட்டு விழா முத்தமிழறிஞர் செம்மொழிக்காவலர் தலைவர் கலைஞருக்கு நுற்றாண்டு நிறைவு விழா தமிழ்நாடு, புதுவை மாநிலத்தில், தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணி மாபெரும் வெற்றி முரசு கொட்டிட, மகத்தான ஆதரவு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா தி.மு.கழகத்தின் முப்பெரும் விழா, வருகின்ற 15 மாலை 4 மணியளவில், கோவை கொடிசியா மைதானத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டுப் பணிகளை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்.